மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை.
முன்னிலை: திரு.செ.பி.பர்வத்ராஜ் ஆறுமுகம், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

2025-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12-ம் நாள் புதன்கிழமை.

இடைநிலை மனு எண்.2/2023

இன்

அசல் வழக்கு எண்.97/2023

1. அரசுக்காக பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர்
2. வேப்பந்தட்டை வட்டாச்சியர்
3. நூர்ஜஹான்
4. முஹம்மது மர்ஜீக்
5. பர்ஜானா பேகம்
6. முஹம்மது பாரூக் ....மனுதாரர்கள்/3 முதல் 6 பிரதிவாதிகள்

/எதிர்/

ரஜியா பேகம் ...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 20.01.2025-ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. சத்தியமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. D. இளவரசு அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

உத்தரவு

இம்மனுவானது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 11-ன் கீழ், இவ்வழக்கில் விசாரணை செய்து இந்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டி மனுதாரர்கள்/ 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்/ 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்

மனுதாரர் அசல் வழக்கில் 6-ம் பிரதிவாதி என்றும், தனக்காவும், இதர 3 முதல் 6 பிரதிவாதிகளுக்காவும் இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கின் 3-ம் பிரதிவாதி தனது அம்மா என்றும், 4,5 பிரதிவாதிகள் உடன் பிறந்த சகோதர, சகோதரி என்றும், மேற்படி வழக்கின் வாதியான ரஜியா பேகம் என்பவர் அடிப்படையில் இந்து மதத்தை சார்ந்தவர் என்றும், அவரது உண்மையான பெயர் சிவமாலை என்றும்,

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.02.12 17:30:02 +0530

மேற்படியாரின் கணவர் பெயர் கந்தசாமி என்றும், மேற்படி சிவமாலை–கந்தசாமி ஆகியோர்களுக்கு ஒரு மகனும், மகளும் உள்ளார்கள் என்றும், மேற்படியார்கள் பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம். அ.மேட்டூர் கிராமத்தை சார்ந்தவர்கள் என்றும், இந்நிலையில் மேற்படி சிவமாலை கணவரான கந்தசாமி என்பவர் நாளது தேதிவரை உயிருடன் இருந்து வரும் நிலையில் அவரிடமிருந்து சட்டப்படியான முறையில் விவாகரத்து உத்தரவு பெறாமலும், சட்டப்படியான முறையில் எவ்வித அரசு பதிவிதழில் (Govt Gazette)–யில் அறிவிப்பு செய்யாமல் சட்டமுரணான வகையில் சிவமாலை என்ற பெயரை ரஜியா பேகம் என்று பெயர் மாற்றம் செய்து தனது தந்தையான இறந்து போன அப்துல் ரஹீம் என்பவருடன் தகாத உறவு கொண்டு வைப்பாட்டியாக இருந்து வந்துள்ளார் என்றும், மேற்படி தனது தந்தையான இறந்து போன அப்துல் ரஹீம் என்பவரை இந்த வாதி முஹமது சட்டப்படி முறையாக திருமணம் செய்யவில்லை என்றும், வாதி கூறுவது போல் திருமணம் செய்துயிருந்தாலும் அந்த திருமணம் செல்லா நிலை திருமணம் என்றும், மேற்படி இறந்து போன அப்துல் ரஹீம் என்ற தனது தந்தைக்கு தானும், 3 முதல் 5 வரையுள்ள பிரதிவாதிகள் மட்டுமே சட்டப்படியான வாரிசுகள் என்றும், இந்த வாதியானவர் அவரது கணவரான கந்தசாமி என்பவரிடமிருந்து சட்டப்படியான விவாகரத்து உத்தரவு பெறாமல் தனது தந்தையான அப்துல் ரஹீம் என்பவரை திருமணம் செய்துள்ளார் என கூறியிருப்பது சட்டத்திற்கு முரணான செயல் மற்றும் ஆரம்ப நிலையிலே செல்லாநிலை என்றும், (Void–ab–initio). எனவே மேற்படி வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றும், மேற்படி தனது தந்தையான இறந்து போன அப்துல் ரஹீம் என்பவர் அரசு பள்ளி ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றுயிருந்த நிலையில் வயது முதிர்வு காரணமாகவும் உடல்நல குறைவு ஏற்பட்டு கடந்த 12–03–2023–ம் தேதியன்று இறந்துவிட்டார், என்றும், இந்நிலையில் தனது தந்தையான இறந்து போன அப்துல் ரஹீம் என்பவரின் ஓய்வூதிய பணபலன்கள், பென்சன் மற்றும் இதர அசையும், அசையா சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வாதி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளதாலும், இவ்வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரர்/ வாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>

மனுவில் கண்டுள்ள சங்கதிகளை மறுத்தும், உண்மையில், எதிர்மனுதாரரின்

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.02.12 17:30:15 +0530

கணவரான காலஞ்சென்ற அப்துல் ரஹீம் அவர்கள் மனுதாரர்கள் ஆன மகன்கள் மற்றும் மகள் அனைவரும் முறையாக பார்த்தும் பராமரித்தும் வராமல் அவரை நிர்கதியாக விட்டுவிட்டு சென்று விட்டனர் என்றும், இவ்வெதிர்மனுதாரரை காலஞ்சென்ற அப்துல் ரஹீம் அவர்கள் இரண்டாவது முறையாக இஸ்லாமிய முறைப்படி திருமணம் செய்து கொண்ட போதும், இம்மனுவில் கூறப்பட்டது போல் எந்தவித ஆட்சேபனைகள் வழக்கு, புகார் ஏதும் தெரிவிக்கப்படவில்லை என்றும், இம்மனுவில் கூறப்பட்டுள்ள அனைத்து சங்கதிகளும் பொருண்மைகள் அடிப்படையிலான கேள்விகளே (Question of Facts) என்றும், எனவே விசாரணை நீதிமன்றத்தில் மட்டுமே இவ்வசல் வழக்கை தீர்மானிக்க முடியும் என்றும் எதிர்பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டது.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில்,
" மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

<u>6. தீர்வு</u>

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/வாதி மனுதாரர்கள்/ 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக கடந்த 12.03.2023 அன்று இறந்த அப்துல் ரஹீம் என்பவருக்கு வாதி மற்றும் 3, 4, 5, 6 பிரதிவாதிகள் மட்டுமே சட்டபடியான வாரிசுகள் என்று விளம்புகை செய்தும், மற்றும் பின்னிட்டு வாதிக்கு வாரிசுசான்று வழங்குவதற்கு ஒரு செயலுறுத்துகட்டளை பரிகாரம் 2ம் பிரதிவாதிக்கு எதிராக வழங்கவும் வேண்டி 05.09.2023ம் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது அசல் கட்டினை பரிசீலித்ததில் தெரியவருகிறது. இந்நிலையில் அசல் வழக்கின் 6ம் பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதும் மனுவில் எதிர்மனுதாரர் / வாதி ஆரம்பத்தில் இந்து மதத்தை சார்ந்தவர் என்றும், அவரது உண்மையான பெயர் சிவமாலை என்றும், அவரது கணவர் பெயர் கந்தசாமி என்றும், அவர் சட்டப்படி மேற்படி கந்தசாமியிடமிருந்து விவாகரத்து எதுவும் பெறாமலும் முறையாக முஸ்லிம் மதத்தை தழுவாமலும் சட்டத்திற்கு முரணாக இறந்து போன அப்துல்ரஹீமை இரண்டாவது திருமணம் செய்துள்ளதாக கூறியுள்ளது

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.02.12 17:30:21 +0530

சட்டப்படி செல்லாநிலையது என்றும், எனவே இவ்வழக்கில் வழக்குமூலம் எழவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில் வழக்குரையை ரத்து செய்ய வேண்டும் என்று கூறியுள்ளதை மறுத்து எதிர்மனுதாரர்/ வாதி தரப்பில் மனுவில் கண்டுள்ள சங்கதிகளை நிரூபிக்க வேண்டியது மனுதாரரின் பொறுப்பு என்றும், மனுவில் கூறியுள்ள காரணங்கள் பொருண்மையின் அடிப்படையிலான சங்கதிகள் என்றும் (question of fact), அந்த வகையில் இவ்வழக்கில் வழக்குமூலம் எழுந்துள்ளதா? என்பதை வழக்கு விசாரணையின் போது வழக்குரையில் கண்டுள்ள பொருண்மைகள் குறித்து சாட்சியங்களின் அடிப்படையிலேயே நிரூபிக்க முடியும் என்ற அடிப்படையில் வழக்குமூலம் எழவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில் இவ்வசல் வழக்கை தள்ளுபடி செய்ய முடியாது என்றும், எதிருரை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

இருதரப்பு வாதங்களையும் ஆராய்கையில் ஒரு வழக்குரை தள்ளுபடி செய்ய வேண்டுமாயின் அது குறித்து உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை VII விதி 11 கீழ்கண்டவாறு கூறுகிறது. Rejection of plaint.– The plaint shall be rejected in the following cases :–

(a) where it does not disclose a cause of action;

(b) where the relief claimed is undervalued, and the plaintiff, on being required by the Court to correct the valuation within a time to be fixed by the Court, fails to do so;

(c) where the relief claimed is properly valued, but the plaint is returned upon paper insufficiently stamped, and the plaintiff, on being required by the Court to supply the requisite stamp–paper within a time to be fixed by the Court, fails to do so;

(d) where the suit appears from the statement in the plaint to be barred by any law;

1[(e) where it is not filed in duplicate;

2[(f) where the plaintiff fails to comply with the provisions of rule 9:]]

3[Provided that the time fixed by the Court for the correction of the valuation or supplying of the requisite stamp–paper shall not be extended unless the Court, for reasons to be recorded, is satisfied that the plaintiff was prevented by any cause of an exceptional nature from correcting the valuation or supplying the requisite stamp–paper, as the case may be, within the time fixed by the Court and that refusal to extend such time would cause grave injustice to the plaintiff மேற்கண்ட சட்ட வகையங்களில் வழக்குரை தள்ளுபடி செய்ய மேற்கண்ட காரணங்கள்

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.02.12 17:30:27 +0530

கூறப்பட்டு இருப்பினும் மனுதாரர் மனுவை கட்டளை VII விதி 11 (a) மற்றும் (d) ஆகிய பிரிவுகளின் கீழ் மனு செய்துள்ளதாக வாதத்திற்கு ஒப்புக்கொண்டாலும், வாரிசு என்று விளம்புகை செய்ய கோரும் பரிகாரத்தை அல்லது வழக்கினை விசாரிப்பதற்கு இந்நீதிமன்றம் எந்த வகை சட்டதினாலும் தடை செய்யப்பட்டு இருக்க வில்லை என்பது உறுதியாகிற நிலையில், கட்டளை VII விதி 11 (d)ன் கீழ் இம்மனுவில் கூறியுள்ள பரிகாரம் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இவ்வழக்கில் வழக்கு மூலம் எழவில்லை என்ற வாதத்தினை மனுதாரர் கூறியுள்ளதை வாதத்திற்கு ஒப்புக்கொண்டு ஆராய்கையில், மனுதாரர் மனுவில் கூறியுள்ளது போன்று எதிர் மனுதாரர் / வாதி மனுவில் எதிர்மனுதாரர் / வாதி ஆரம்பத்தில் இந்து மதத்தை சார்ந்தவர் என்றும், அவரது உண்மையான பெயர் சிவமாலை என்றும், அவரது கணவர் பெயர் கந்தசாமி என்றும், அவர் சட்டப்படி மேற்படி கந்தசாமியிடமிருந்து விவாகரத்து எதுவும் பெறாமலும் முறையாக முஸ்லிம் மதத்தை தழுவாமலும் சட்டத்திற்கு முரணாக இறந்து போன அப்துல்ரஹீமை இரண்டாவது திருமணம் செய்துள்ளதாக கூறியுள்ளது சட்டப்படி செல்லாநிலையது என்றும், எனவே இவ்வழக்கில் வழக்குமூலம் எழவில்லை என்ற சங்கதிகளை வழக்கு விசாரணையின் போது மட்டுமே தீர்மானிக்க முடியும் என்ற வகையிலும் மேற்படி மனுவில் கூறியுள்ள சங்கதியை கொண்டு மட்டுமே இவ்வழக்கில் வழக்குமூலம் எழவில்லை என்பதை மனுதாரர் நிரூபித்து விட்டதாக கருத முடியாது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் எடுத்துரைத்துரைத்துள்ளதன்படி மனுவில் கூறியுள்ள காரணங்கள் பொருண்மை சங்கதிகளாக உள்ள நிலையில் அவை குறித்து சாட்சியங்களின் மூலமோ ஆவணங்களின் மூலமோ தீர்மானிக்க வேண்டியது அவசியம் என்ற நிலையில் அதனைக் கொண்டு மட்டுமே வழக்குமூலம் எழவில்லை என்பதாக கருத முடியாது என்று நீதிமன்றம் கருதியும், இது குறித்து மனுதாரர் தனது எதிர்வழக்குரையில் எடுத்துரைக்கும் பட்சத்தில் அது குறித்து வழக்கெழுவினா வனையப்பட்டு வழக்கு விசாரணையில் தீர்மானிக்க வேண்டியது நீதியின் நலன் பொருட்டு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இந்நிலையில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட Supreme Court of India Lity Thomas, Etc. Vs Union Of India & Ors. Dated 05.04.2000 (2000) 6 SCC224 என்ற மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரையை ஆராய்கையில் அதில் இந்து திருமண சட்டத்தின்படி நடைபெறாத

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.02.12 17:30:33 +0530

திருமணம் சட்டப்படி இல்லா நிலையது என்று கூறியுள்ளது தெரிய வருகிறது.

மேலும் விவாதிக்கப்படி வழக்கில் மேற்படி மனுவில் கண்டுள்ள காரணம் அதாவது எதிர்மனுதாரர் / வாதி சட்டப்படி விவாகரத்து பெறாமல் இறந்து போன அப்துல் ரஹீம் என்பவரை திருமணம் செய்து கொண்டது சட்டப்படி ஏற்கத்தக்க திருமணமல்ல என்றும், அது இல்லா நிலையது என்றும், கூறியுள்ளதும் வழக்கு விசாரணையின் போது தீர்மானிக்க வேண்டிய சங்கதி என்று கருதி மேற்படி முன் தீர்ப்புரை மனுதாரருக்கு எந்த பலனையும் அளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த Mayar (H.K) Ltd. & Ors vs Owners & Parties, Vessel M. V. Fortune dated 30.01.2006 AIR 2006 SUPREME COURT 1828 என்ற மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரையை பரிசீலிக்கையில் அதில் பொருண்மையுடன் கூடிய வினா அமைந்தும் வழக்கு மூலத்தை பொருத்தும் ஒரு வழக்குரை அமைந்துள்ள போது அதில் வழக்கு மூலம் எழவில்லை என்ற காரணத்தைக் காட்டி கட்டளை VII விதி 11 ன் கீழ் தள்ளுபடி செய்து விட முடியாது என்றும், அது வழக்கு விசாரணையில் தீர்மானிக்கபட வேண்டும் என்றும், கூறியுள்ளது தெரிய வருகிறது. இவ்வழக்கிலும் மேலே முடிவு கண்டுள்ளது போன்று மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் வழக்கு விசாரணையில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயங்கள் என்று கருதி மேற்கண்ட காரணங்களுக்காக மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லச்சொல்ல அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12-ம் நாள் கையொப்பம் இடப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.02.12 17:30:39 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>
இல்லை.

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.02.12 17:30:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.